[1993 ஏப்ரல் 22

திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல அந்த ஊரின் உட்பகுதியில் இடத்தைக் கொடுக்க அங்கேயுள்ள தனவந்தர்கள் முன்வந்திருக்கிறார்கள். அதைக் கொடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதேநேரத்தில் ஒரு தொகுதிக்கு ஒரு பாலம் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்ததைப்போல, ஒரு தொகுதிக்கு ஒரு மகளிர் உயர்நிலைப்பள்ளி என்ற ஒரு புதிய திட்டத்தை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகிற ஆண்டில் ஆரம்பிக்கப்பட இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளில் இதுவும் ஒரு உயர்நிலைப் பள்ளியாக வர வேண்டுமென்றால், அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அப்போதுதான் நாம் அந்த உயர் மட்டக் குழுவினிடம் இவைகளையெல்லாம் வைத்து ஆய்வு செய்யச் சொல்ல முடியும். மற்றபடி எல்லா தொகுதிகளிலும் ஒரு பள்ளிக்கூடம் ஆரம்பிப்பது என்பது ஒரு நல்ல எண்ணத்தின் அடிப்படையில் சொல்லப்படுகிற யோசனை என்கிற அளவில் அரசு அதை கவனத்தில் எடுத்துக் கொள்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 423, திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

423—

பள்ளி மாணவ, மாணவியருக்கு சீருடைகள் மாற்றல்.

* 15283—திரு. கே. பி. ராஜு:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு சீருடைகளை மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்.:

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவுத் திட்டத்தின் கீழ் பள்ளிகளில் 1 முதல் 8 வகுப்பு முடிய பயிலும் சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் மட்டுமே நடைமுறையில் உள்ளது. இது தவிர இந்தச் சீருடைகள் மாற்றும் செயற்குறிப்பு எதும் தற்போது இல்லை.

1993 ஏப்ரல் 22]

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்கள் சுமார் 20, 25 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்திய சீருடைகளைத்தான் யூனிபார்ம் ஆக அணிந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது காலத்திற்கு தகுந்தாற்போல் நாகரீகமான இந்தக் காலத்தில் சீருடைகளை எளிமையாக இருக்கும் படியாக மாற்றியமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். காரணம் என்னவென்று கேட்டால் இப்போது கல்லூரிகளில் சுடிதார் போடுகிறார்கள், ஸ்கர்ட் போடுகிறார்கள். இது போன்ற யூனிபார்ம்களை கல்லூரி மாணவிகள் போடுகிறார்கள். ஆனால் பள்ளிகளில் படிக்கிற மாணவியர் அந்த பழைய காலத்து யூனிபார்மைத் தான் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, காலத்திற்கு தகுந்த மாதிரி இந்த யூனிபார்மை மாற்றியமைக்க செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்திற்கு தகுந்தபடி மாற்றுவது என்பது வேறு. ஆனால் நாம் சீருடைகளைப் பற்றி பேசுகிற போது எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு பொதுவான நடைமுறையாக இருக்க வேண்டும். அந்தமுறையில் இப்போது அமலில் இருக்கிற இந்த சீருடைகளே எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது. நாம் வேறு மாற்றங்களைச் செய்வோமானால் அதிலே பல்வேறு அரசியல் பிரச்சினைகள் கூட வரலாம். அது தமிழனுடைய கலாச்சாரத்திற்கு பொருந்தியதுதானா, வடநாட்டு கலாச்சாரத்தைத் திணிக்கிறீர்களா என்றெல்லாம் கூட சில கலாச்சார உணர்வு மிக்கவர்கள் அதை எதிர்க்கக் கூடிய நிலை இருக்கும். ஆகவே, எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு, இப்போது இருக்கிற நடைமுறையே சிறந்ததாகப்படுகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முற்பகல் 10.15

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் காவலர்களுக்கு ஆப் பேண்ட இருந்தது. அதைக் காலத்திற்கு தகுந்த மாதிரி இப்போது ஃபுல் பேண்ட்டாக ஆக்கி விட்டோம்—அதே மாதிரி, பெண் காவலர்களுக்குக்கூட சீருடை வேறு மாதிரி இருந்தது. புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அழகான சீருடையை வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார்—அதேபோல்

பழங்காலத்திலிருந்த யூனிபார்ம்களை வைத்துக் கொண்டிருப்பதைவிட, காலத்திற்கு தகுந்த மாதிரி மாற்றுவதில் தவறு இல்லையே. இதைச் செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவ மாணவிகளிடமிருந்து இதுபற்றி எந்தவிதமான எதிர்ப்போ அல்லது இப்படி எல்லாம் நாங்கள் போடவில்லை, வேறு விதமாகப் போட வேண்டும் என்கிற ஒரு கோரிக்கையோ வரவில்லை. ஆசிரியர்கள் மத்தியிலிருந்தும் வரவில்லை, பெற்றோர்களிடமிருந்தும் வரவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினருக்கு மட்டும் தனியாக இந்த யோசனை எப்படியோ வந்திருக்கிறது. அதை அவர்கள் கேள்வியாகப் போட்டு கேட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட விநோதமான யோசனைகளுக்கு எல்லாம் அரசு நடவடிக்கை எடுக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பீட்ரிக்ஸ் டி'சோசா.

Dr. BEATRIX D'SOUZA : Hon. Speaker, sir, the uniformity of school uniforms is conducive to discipline and more important is conducive to a levelling of social differences. That is why we find that rich schools have better uniforms and poor schools have poorer uniforms. Will the Government consides giving better school uniforms to the Corporation school children, most of whom are poor, because now it is very depressing. They will have a better self-image. They will not feel that they are poor children.

HON. Dr. C. ARANGANAYAGAM : Hon. Speaker, sir, that will be taken into consideration.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்கை கோவிந்தராசு.

திரு. சிங்கை கோவிந்தராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தனியார் பள்ளிகளிலே, கான்வென்டுகளிலே கூட தினசரி சீருடை அணிந்து குழந்தைகள் மிக அழகான முறையிலே பள்ளிகளுக்குச் செல்வதை நாம் காண்கிறோம். ஆனால் அரசுப் பள்ளிகளிலே திங்கட்கிழமை அன்றும் வெள்ளிக்கிழமை அன்றும் மட்டும் சீருடை அணிந்துவருகிறார்கள், அவர்களும் வாரம் முழுவதும் இதுபோன்ற சீருடை அணிந்து வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 22]

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிச் சொல்லும்போது அவர்களாலே முடிவதில்லை என்ற காரணத்தாலேதான், திங்கள், வெள்ளி என்று வைத்திருக்கிறோம். இதற்கு அந்தக் குடும்பச் சூழ்நிலையையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்கள் ஏழைகளாக இருப்பார்களானால், தினமும் சீருடை அணிந்து குழந்தைகளை பள்ளிகளுக்கு அனுப்புவது என்பது அவர்களுக்குச் சிரமமாகப்படுகிறது. ஆகவே, நாம் இதையும் கருத்திலே எடுத்துக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. ஆகவேதான் இரண்டு நாட்கள் என்று வைக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு சீருடை கொடுத்தற்குப் பின்னாலே ஒரு முக்கிய காரணம் இருக்கிறது. ஒரே ஊரிலே இருக்கிற பல பள்ளிகளில் ஒரே சீருடை அணிந்து மாணவ மாணவிகள் வருகிறபோது, அவர்கள் எந்தப் பள்ளியைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிவதற்குக் கடினமாக இருக்கிறது. ஒரே ஊரிலே இருக்கிற பல பள்ளிகளைச் சேர்ந்த குழந்தைகள் பலதரப்பட்ட சீருடைகளில் வருகிறபோது, வழியிலே ஒரு விபத்து என்று வைத்தாலும் சரி, அந்தக் குழந்தையைப் பார்க்கிறபோது, இந்தக் குழந்தை இந்தப் பள்ளியைச் சேர்ந்தது என்பதை உடனடியாக அடையாளம் கண்டுகொள்வதற்கு சீருடை மிகவும் உதவிகரமாக இருக்கும். அதுபோல், எந்தப் பள்ளியைச் சேர்ந்த குழந்தை என்று தெரிந்துகொள்வதற்கும் அது மிக உதவியாக இருக்கிற காரணத்தால், ஒரே ஊரிலே இருக்கிற பல பள்ளிகளில் வேறு வேறு வண்ணங்களில் சீருடை அணிய வேண்டும் என்று அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, வித்தியாசங்களை ஒழிப்பதற்காகத்தான் சீருடையைக் கொண்டு வந்திருக்கிறோம். இப்போது சீருடையிலே ஒரு வித்தியாசத்தைக் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறார்கள். அவர்களுக்கு எது ஏற்பட்டாலும் பள்ளியிலே படிக்கின்ற மாணவன் அல்லது மாணவி என்று தெரிந்தாலே மற்றவர்கள் தேவையான உதவிகளைச் செய்வார்கள், அவர்களுக்கு ஆதரவாக இருப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 424, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.